

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவாரூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதையொட்டி நேற்று முன்தினம் (30.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் எ.வ. வேலு, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவாரூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதையொட்டி நேற்று முன்தினம் (30.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் உள்ளனர்.

### தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு உருது மக்கள் கட்சி ஆதரவு!



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் உருது மக்கள் கட்சி தலைவர் டாக்டர் உபைதுல்லா பைக் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு உருது மக்கள் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு உருது மக்கள் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தி.மு.க, தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

# இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் ஆதரவு!



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன், Ex.M.L.A அவர்கள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### மாநிலம் முழுவதும் தேர்தல் பரப்புரையில் ஈடுபடப்போகும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வெற்றி - பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு–இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச் செல்வன் வாழ்த்துக் கடிதம்!



*சென்னை, ஏப். 1–*

***தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பரப்புரையில் ஈடுபடும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் கடிதம் எழுதியுள்ளார்.***

அக்கடிதத்தில் மாநிலம் முழுவதும், தேர்தல் பரப்புரையில் ஈடுபடப்போகும் தங்களுக்கு அன்பான வாழ்த்துகள். மாபெரும் வெற்றிக்கு இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துக்கள் என்றும், அ.அன்புச் செல்வன் அவர்கள் அக்கடிதத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அ.அன்புச்செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:–

**அன்பு கெழுமிய நண்பர், தலைவர், ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

இன்று ( 30/03/2026 ) தாங்கள் சிறப்புறச் சேவைகள் புரிந்திருக்கும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு நான்காவது முறையாக வேட்பு மனுத் தாக்கலை முடித்துவிட்டு மாநிலம் முழுவதும் தேர்தல் பரப்புரையில் ஈடுபடப் போகும் தங்களுக்கு அன்பான வாழ்த்துகள்! மாபெரும் வெற்றிக்கு இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்!

**சவால்கள் நிறைந்த 2026 சட்டமன்றத் தேர்தல் தொடர்பான மகத்தான கூட்டணியை உருவாக்க தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், தொகுதி உடன்பாடு பணிகள், இரவு பகல் பாராமல் உழைத்து கழக வேட்பாளர்களைத் தேர்வு செய்ய தினமும் 10 மணிநேரத்திற்கு மேலாக நேர்காணல் நடத்தி அருமையான வேட்பாளர்களை களம் காணச் செய்துள்ளீர்கள். தொடர் வெற்றிகளின் நாயகரான தாங்கள் உழைப்பின் உச்சம் தாங்கள் என்பதை நிரூபித்து விட்டீர்கள்! ஒரு மாபெரும் சேனையின் படைத்தளபதியாக விளங்கும் தங்களின் வல்லமைகளைக் கண்டு எதிரிகள் மிரண்டு போய் உள்ளார்கள். தேர்தல் Perception போரில் வெற்றியைப் பதிவு செய்து உள்ளீர்கள்.**

தங்களின் சலியாத உழைப்பிற்கு மகுடம் சூட்டும் வகையில் மிக நேர்த்தியாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறீர்கள். தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு சொல்லும் தமிழகத்தின் பல்துறை வளர்ச்சிக்கு தேர்தல் அறிக்கை வழி கோலும் என்பது உறுதி.

**200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்!**

தங்களின் ஐந்தாண்டு கால சரித்திர சாதனைகளும், கடும் உழைப்பும், கட்டுப்கோப்பான கழக அமைப்பும், நிர்வாகிகளும், தொண்டர்களும், இயக்க அனுதாபிகளும், தமிழ்நாட்டை 2030 ஆண்டுகளில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்ற நினைக்கும் திராவிட மாடல் அரசை மீண்டும் அரியணையில் ஏற்றுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்.

21.03.26 தேதியிட்ட முரசொலியில் உடன்பிறப்புகளுக்காக "உங்களில் ஒருவன்" மடலை படித்து மெய்சிலிர்த்தேன். அவ்வரிகள்

"தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்!

இத்தகைய பாச உணர்வுதான் தொண்டர்களை வாழையடி, வாழையாக கழகத்தின் பால் ஈர்க்கிறது. இத்தகைய தொண்டர்களை கொண்ட இயக்கத்தினை வீழ்த்த எந்த சக்தியாலும் முடியாது. வீழ்த்த நினைத்தவர்கள் ஏராளமானவர்கள் ஆனால் அவர்கள்தான் தோல்வியை தழுவினார்கள். கழகம் அதே உயிர்ப்புடன் ராஜ நடை போட்டு கம்பீரத்துடன் களத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் களத்தில் நிற்கிறது.

உறுதிசெய்யப்பட்டு விட்டது நம் வெற்றி. ஆனாலும் அறுவடைக்கு தயாராக இருக்கும் பயிரை பத்திரமாக அறுவடை செய்வது உடன்பிறப்புகளின் கடமை. களத்தில் கண் துஞ்சாது உழைத்து வெற்றிக் கனியை பறித்து நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் போன்ற தலைவர்களுக்கு காணிக்கையாக்குவோம்.

மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்வோம் ஒன்றாக!!!

தொடரட்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!!

வாழ்க வளர்க வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்!!!

**இவண்,**
**அ. அன்புச்செல்வன்,**
**30/03/2026**

இவ்வாறு அ.அன்புச் செல்வன் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய சமூக நீதி இயக்கம் ஆதரவு!



முதலமைச்சர் கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் கதிரொளி மாணிக்கம் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய சமூகநீதி இயக்கம் முழு ஆதரவு அளிப்பதாகவும், தமிழக சட்டமன்றத்தின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு இந்திய சமூகநீதி இயக்க நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.